**பண்டகசாலைப் பெறுவனவுகள் நிதியளிப்பு செயற்திட்டம் -2015**

பண்டகசாலைப் பெறுவனவுகள் நிதியளிப்பு செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 யூலை 17 ஆந் திகதிய ரீஎவ் 6138 (ரீஎவ் 012186) ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் II பீ 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

பண்டகசாலைப் பெறுவனவுகள் நிதியளிப்பு செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சும் தற்போதைய நிதி அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அபிவிருத்தி நிதி திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மின்னியல் மற்றும் கலந்தாலோசிக்கக்கூடிய பண்டகசாலை பெறுவனவுகள் நிதியளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் விவசாய உற்பத்திகளுக்கான தரமான களஞ்சியப்படுத்தல் வசதிகளுக்கான அணுகுமுறையை விவசாயிகளுக்கு வழங்கல் மற்றும் நிதிச்சேவைகளை அணுகுவதற்கு துணையாக அத்தகைய உற்பத்திப் பொருட்களை பயன்படுத்துவதற்கு வசதியளித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 852.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 6.5 மில்லினானதுடன் செயற்திட்டத்தின் முழுக்கிரயமும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2012 யூலை 17 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2015 யூலை 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப்

பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட டொலர் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி

அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(உ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) விசேட டொலர் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்ததென்றும்,

(ஈ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது நிதிகளின் பயன்பாடு மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 6.5 | 852.8 | 442 | 132 | 4.7 | 612 |
| | 6.5 | 852.8 | 442 | 132 | 4.7 | 612 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட தகவலின் பிரகாரம், ரூபா 852.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 6.5 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், ரூபா 612 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.7 மில்லியன் மாத்திரமே செயற்திட்ட இறுதிக் காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பெரிய வெங்காய பண்டகசாலைகளை நிர்மாணிப்பதற்கு விவசாயிகளிற்கு உதவும் முகமாக மானிய உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 78.72 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 600,000 ஒதுக்கீட்டில், ரூபா 48.58 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 370,320 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட இறுதிக் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1.68 மில்லியன் செலவழிக்கப்படாத பெறுகைகள் மானியம் மீள்நிதியிடப்பட்டிருந்தது. மேலும், மன்னாரில் பாரிய பண்டகசாலையை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 184 மில்லியன் தொகையான ஒப்பந்தத்தின் மொத்தக்கிரயத்தில் ரூபா 73.76 மில்லியன் தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தது. ஆகையால், பண்டகசாலையின் நிலுவையாகவுள்ள வேலைகளுக்கான கிரயம் இலங்கை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்படலாம்.

### 3.2. பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டமானது பண்டகசாலைப் பெறுவனவு முறைமையை அமுலாக்குவதற்கு 03 பெரிய பண்டகசாலையை குருலுவெவ, புத்தள மற்றும் மன்னாரில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அவற்றில் குருலுவெவ மற்றும் புத்தளயிலுள்ள பண்டகசாலையின் நிர்மாண வேலைகள் முறையே 2015 மார்ச் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் பூர்த்தியாக்கப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் 5000 மெற்றிக் தொன் இயளலவைக் கொண்டுள்ள குருலுவெவ மற்றும் புத்தளயிலுள்ள பண்டகசாலைகளில் விவசாயிகளின் உற்பத்திகளை களஞ்சியப்படுத்தல் 2015 மார்ச் 31 மற்றும் 2016 சனவரி 31 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் குருலுவெவ மற்றும் புத்தளயிலுள்ள பண்டகசாலைகளில் முறையே 314 மெற்றிக் தொன் மற்றும் 230 மெற்றிக் தொன் தானியங்கள் மாத்திரமே 2016 மே 31 வரை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மன்னாரிலுள்ள களஞ்சியசாலையை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2015 மே 11 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 40 சதவீத வேலைகள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) மேலும், செயற்திட்டமானது பெரிய வெங்காய பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளிற்கு அவர்களுடைய பண்டகசாலையை நிர்மாணிப்பதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுகளை வழங்கியிருந்தது. ஆகையால், மாத்தளை மாவட்டத்திலுள்ள 500 பண்டகசாலைகள் உள்ளடங்கிய 600 பண்டகசாலைகள் செயற்திட்ட காலத்தின் போது நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. பெறப்பட்ட தகவலின் பிரகாரம், மாத்தளை மாவட்டத்திலுள்ள 143 விவசாயிகள் உள்ளடங்கிய 352

விவசாயிகள் பெரிய வெங்காய பண்டகசாலை நிர்மாணிப்பு வேலைகளை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்திருந்தனர்.

(இ) செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், கடன் பேச்சுவார்த்தை நோக்கங்களிற்காக மின்னியல் பொறிமுறையொன்றின் அபிவிருத்தி மூலம் வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன்களை பெற்றுக்கொள்வதற்கு அத்தாட்சிகளாக விவசாயிகளால் அவர்களுடைய உற்பத்திப்பொருட்களை பயன்படுத்துவதற்கு வசதிகளை வழங்கும் முகமாக முன்மொழியப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவால் குருலுவெவ மற்றும் புத்தளயிலுள்ள பண்டகசாலையில் களஞ்சிய வசதிகளை பெற்ற முறையே 70 மற்றும் 16 விவசாயிகளுக்கு மாத்திரமே ஒரு மின்னியல் பொறிமுறையூடாக கடன் வசதிகளை பெறுவதற்கு வசதிகளை வழங்க முடிந்திருந்தது. மன்னாரிலுள்ள பண்டகசாலை நிர்மாண வேலைகளின் பூர்த்தியாக்கலில் ஏற்பட்ட காலதாமதத்தினால் மன்னார் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கான மின்னியல் பெறுவனவு பொறிமுறையை அமுலாக்குவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புத்தளயிலுள்ள பாரிய பண்டகசாலை மொனராகலை மாவட்டத்தின் ஓரத்தில் அமைக்கப்பட்டிருந்ததுடன் சியம்பலந்துவ, மதுள்ள, வடல்கும்புற, மடகம மற்றும் விவிலி போன்ற மாவட்டத்தின் பழமையான பிரதேசங்களிலுள்ள விவசாயிகள் நெல் வயலிலிருந்து பண்டகசாலைக்கான போக்குவரத்திலுள்ள உயர் கிரயத்தினால் அவர்களுடைய உற்பத்திகளின் களஞ்சிய வசதிகளுக்காக நன்மையடைந்திருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது 02 பருவகாலங்களில் நெல்லின் 616,996 மெற்றிக் தொன்கள் உற்பத்தி பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் அவர்களுடைய உற்பத்திகளின் களஞ்சிய வசதிகளுக்காக நன்மையடைந்திருக்கவில்லை.